# <u>தேவகோட்டை நகராட்சி</u>

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனிஅலுவலரால் 10.08.2021ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## <u>பொருள்: 86</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண் 24817/ஜே3/2020, நாள் 13.07.2021ம் தேதிய கடிதத்தில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மாசற்ற முறையில் 20 ஆண்டுகள் பணிமுடித்த ஒட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்குவதற்கான விபரப் பட்டியல் பெறப்பட்டு இந்நகராட்சியில் பணிபுரியும் திரு.எஸ்.மதர் அவர்களுக்கு தங்கபதக்கம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை சம்மந்தப்பட்ட நகராட்சிகளில் பெற்றுக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி திரு.எஸ்.மதார், ஒட்டுநருக்கு தஙகப்பதக்கம் பெறுவதற்கு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டு கழகம் லிமிடெட், சென்னை என்ற முகவரிக்கு ரூ.25500/—க்கான கேட்பு வரைவேலை அனுப்பிவைக்க ந.க.எண் 710/எஸ்பி/21—22—36, நாள் 22.07.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே திரு.எஸ்.மதார், ஒட்டுநருக்கு தங்கப்பதக்கம் வழங்க ரூ.25500/—க்கு கேட்பு வரைவோலை எடுக்க மன்றம் அனுமதிக்கு

**<u>அலுவலக குறிப்பு:—</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 86</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 87</u>

ந.க.எண்.0082/2020/அ2, நாள் 28.07.2021

தேவகோட்டை நகராட்சி 2021—2022ம் ஆண்டிற்கான மூன்றாண்டு குத்தகை இனங்களில் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய தொலைக்காட்சி பெட்டி வசூல் குத்தகை உரிமம் பெற 28.07.2021ம் தேதியன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | இனம் எண் | இனம் | பெயர் | ஏலத் தொகை | குறைந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி | அதிக பட்ச ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 02 | பேருந்து நிலைய தொலைக்காட்சி பெட்டி வசூல் | திரு.த.உதயபிரகாஷ். | — | 83,000 | — |
| 2 | | | திரு.ஜெ.லெட்சுமணன். | — | — | 83,500 |

மேற்படி இனத்திற்கு யாரும் பொது ஏலத்திலும் கலந்துக்கொள்ளவில்லை. இருவர் ஒப்பந்தப்புள்ளியிலும், கலந்து கொள்ள வைப்புத்தொகை மற்றும் கூடுதல் காப்புத்தொகையினை செலுத்தி உள்ளனர். மேலும் வரிசை எண் 1, 2ல், கண்டவர்களில் இரண்டாவது நபரான திரு.ஜெ.லெட்சுமணன் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.83,500/—க்கு, கேட்டுள்ளார். அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள திரு.ஜெ.லெட்சுமணன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.83,500/— ஆனது இந்கராட்சியின் மூன்றாண்டுகளில் இதே இனத்திற்கான சராசரி தொகை ரூ.75,135/—ஐ விட 11% அதிகமாக

கேட்டுள்ளார். கடைசி ஆண்டு ஏலத்தொகை ரூ.71,500/—ஐ, விட ரூ.12,000/—ஐ, அதிகமாக கேட்டுள்ளார். அனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். அன்னாருக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்காணும் இனத்திற்கு முதல் ஆண்டு உரிமம் வழங்கி ஒப்படைப்பு செய்யவும் இரண்டாம் ஆண்டுக்கு முதல் ஆண்டு ஏலத்தொகையில் இருந்து 5% உயர்வு செய்து (வரிகள் தனி) உத்தரவு வழங்கவும். மூன்றாம் ஆண்டுக்கு இரண்டாம் ஆண்டு ஏலத்தொகையிலிருந்து 5% உயர்வு செய்து (வரிகள் தனி) உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:—</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 87</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்:88</u>

தேவகோட்டை நகராட்சியில் பொதுநிதி 2020—2021ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 04.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு வளாகத்தில் சுற்றுச்சுவர் உயர்த்திக் கட்டுதல், காவலர் அறை மற்றும் கழிப்பிட வசதி செய்தல் பணி. | 9.80 | 1)திரு. R.பாலாஜி | 0.16 % குறைவு |
| | | | 2) திரு. R. தர்மராஜன் | 2.52 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்..

**<u>தீர்மான எண்: 88</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்:89</u>

தேவகோட்டை நகராட்சி தொடர்பான வழக்குகளை கீழமை நீதிமன்றங்களில் வழக்கு நடத்திட திரு.எஸ்.குமார், வழக்கறிஞர் அவர்களை நியமன செய்திட கோரி 27.07.2021ல், அன்னார் அளித்துள்ள மனு மற்றும் ஆணையாளர் அவர்களின் 30.07.2021ம் தேதிய உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அன்னார் 15 ஆண்டுகள் பணி அனுபவம் உள்ளதால் அன்னார் திரு.எஸ்.குமார், வழக்கறிஞர் அவர்களை இந்நகராட்சி வழக்குளை நடத்திடவும் வழக்குகள் குறித்த ஆலோசனை பெற்றிடவும் நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:— மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 89</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்:90</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2045/2020/LA3 நாள்.10.11.2020ன்படி மத்திய அரசின் 15வது நிதிக்குழு மான்ய நிதியின் கீழ் 2020—21—ம் ஆண்டிற்கு Tied Grant நிதியாக முதல் தவணையாக ரூ.71,25,414/— இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. தொடர்ந்து இரண்டாம் தவணையாக ரூ.71,25,414/— வரப்பெற்றுள்ளது. மேற்கண்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ள நெறிமுறைகளின்படி இரண்டு தவணை தொகைகளையும் சேர்த்து ரூ.142.50 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.1.50 இலட்சம் என சேர்த்து மொத்தம் ரூ.144.00 இலட்சத்தில் ரூ.82.00 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர்

பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள ரூ62.00 இலட்சத்தில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை கையாளத்தக்க வகையில் மாறுதல் செய்ய காரைக்குடி நகராட்சி கலவை உரக்கிடங்கில் குப்பை எரியூட்டும் ஆலை அமைக்கும் திட்டத்தில் தேவகோட்டை நகராட்சியையும் சேர்த்திட இந்நகராட்சி பங்குத்தொகை ரூ.62.00 இலட்சம் செலுத்த தீர்மானிக்கப்பட்டது. தற்போது மேற்காணும் தொகைக்கு மாற்றுப்பணிகள் செய்திடகோரி மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி செய்தி வரப்பெற்றது. அதனை தொடர்ந்து இவ்வலுவலக சுகாதார ஆய்வாளர் அவர்களின் 20.07.2021–ந் தேதிய குறிப்பின்படி பொதுசுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவின் அத்தியாவசிய பணியின் அவசியம் கருதி இந்நகராட்சிக்கு சொந்தமாக புதிய JCB (Tata Hitachi) இயந்திரம் வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள், நீர்நிலைகள் மற்றும் நகரின் விரிவாக்கப் பகுதிகளில் உள்ள தேவையற்ற கருவேல மரங்கள் செடிகொடிகள் மற்றும் இதரப் பணிகளுக்கும் தற்போதுள்ள துாய்மை பணியாளர்களை கொண்டும் செயல்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது. எனவே பொதுசுகாதாரப் பணிகள், பொறியியல் பிரிவு பணிகள், நகரமைப்பு பணிகள் மற்றும் மழைக்காலங்களில் பேரிடர் மீட்பு பணிகள் ஆகிய அனைத்து பணிகளும் மேற்கொள்ள அவ்வப்போது JCB (Tata Hitachi) இயந்திரம் வாடகைக்கு எடுத்து மேற்படி பணிகளை செயல்படுத்துவதால் நகராட்சிக்கு பெருமளவில் நிதி இழப்பும் காலதாமதமும் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதியும், நகராட்சி நிர்வாக நலன் கருதியும் மற்றும் பணியின் அவசியம் கருதியும் புதியதாக JCB (Tata Hitachi) இயந்திரம் வாங்கிட உத்தேச செலவீனம் ரூ.34.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணி பொதுசுகாதார பணியாக இருப்பதால் பணியின் அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 90</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்:91</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2045/2020/LA3 நாள்.10.11.2020ன்படி மத்திய அரசின் 15வது நிதிக்குழு மான்ய நிதியின் கீழ் 2020–21–ம் ஆண்டிற்கு Tied Grant நிதியாக முதல் தவணையாக ரூ.71,25,414/– இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. தொடர்ந்து இரண்டாம் தவணையாக ரூ.71,25,414/– வரப்பெற்றுள்ளது. மேற்கண்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ள நெறிமுறைகளின்படி இரண்டு தவணை தொகைகளையும் சேர்த்து ரூ.142.50 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.1.50 இலட்சம் என சேர்த்து மொத்தம் ரூ.144.00 இலட்சத்தில் ரூ.82.00 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள ரூ62.00 இலட்சத்தில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை கையாளத்தக்க வகையில் மாறுதல் செய்ய காரைக்குடி நகராட்சி கலவை உரக்கிடங்கில் குப்பை எரியூட்டும் ஆலை அமைக்கும் திட்டத்தில் தேவகோட்டை நகராட்சியையும் சேர்த்திட இந்நகராட்சி பங்குத்தொகை ரூ.62.00 இலட்சம் செலுத்த தீர்மானிக்கப்பட்டது. தற்போது மேற்காணும் தொகைக்கு மாற்றுப்பணிகள் செய்திடகோரி மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி செய்தி வரப்பெற்றது. அதனை தொடர்ந்து ரூ.62.00 இலட்சத்தில் பொதுசுகாதார பணிக்கு மற்றும் பொறியியல் பிரிவு அத்தியாவசிய பணிகளுக்கு ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய JCB (Tata Hitachi) இயந்திரம் வாங்கிட மதிப்பீடு தயார்செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி 28.07.2021–ம் தேதி நிர்வாக மண்டல பொறியாளர் மதுரை அவர்கள் திடக்கழிவு மேலாண்மை திட்ட (SBM) உரமாக்கல் மையங்களை நேரில் ஆய்வு செய்ததில் இராம்நகர் மற்றும் சருகணி ரோடு MCC மையங்களில் நவீன (Conveyor Belt) அரவை இயந்திரம் வாங்கி பொருத்தி பணி மேற்கொள்ள நேரடி அறிவுரை வழங்கியுள்ளார் என 29.07.2021–ம் தேதிய இவ்வலுக சுகாதார ஆய்வாளர் குறிப்பு வழங்கியதை தொடர்ந்து பொதுசுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி இராம்நகர் MCC மையத்துக்கு புதிய நவீன அரவை இயந்திரம் ஒன்று மற்றும் சலித்தல் இயந்திரம் ஒன்று வாங்கிட உத்தேச செலவீனம் ரூ.14.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணி பொதுசுகாதார பணியாக இருப்பதால் பணியின் அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 91**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்:92

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2045/2020/LA3 நாள்.10.11.2020ன்படி மத்திய அரசின் 15வது நிதிக்குழு மான்ய நிதியின் கீழ் 2020–21–ம் ஆண்டிற்கு Tied Grant நிதியாக முதல் தவணையாக ரூ.71,25,414/– இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. தொடர்ந்து இரண்டாம் தவணையாக ரூ.71,25,414/– வரப்பெற்றுள்ளது. மேற்கண்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ள நெறிமுறைகளின்படி இரண்டு தவணை தொகைகளையும் சேர்த்து ரூ.142.50 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.1.50 இலட்சம் என சேர்த்து மொத்தம் ரூ.144.00 இலட்சத்தில் ரூ.82.00 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள ரூ62.00 இலட்சத்தில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை கையாளத்தக்க வகையில் மாறுதல் செய்ய காரைக்குடி நகராட்சி கலவை உரக்கிடங்கில் குப்பை எரியூட்டும் ஆலை அமைக்கும் திட்டத்தில் தேவகோட்டை நகராட்சியையும் சேர்த்திட இந்நகராட்சி பங்குத்தொகை ரூ.62.00 இலட்சம் செலுத்த தீர்மானிக்கப்பட்டது. தற்போது மேற்காணும் தொகைக்கு மாற்றுப்பணிகள் செய்திடகோரி மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி செய்தி வரப்பெற்றது. அதனை தொடர்ந்து ரூ.62.00 இலட்சத்தில் பொதுசுகாதார பணிக்கு மற்றும் பொறியியல் பிரிவு அத்தியாவசிய பணிகளுக்கு ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய JCB (Tata Hitachi) இயந்திரம் வாங்கிட மதிப்பீடு தயார்செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி 28.07.2021–ம் தேதி நிர்வாக மண்டல பொறியாளர் மதுரை அவர்கள் திடக்கழிவு மேலாண்மை திட்ட (SBM) உரமாக்கல் மையங்களை நேரில் ஆய்வு செய்ததில் இராம்நகர் மற்றும் சருகணி ரோடு MCC மையங்களில் நவீன (Conveyor Belt) அரவை இயந்திரம் வாங்கி பொருத்தி பணி மேற்கொள்ள நேரடி அறிவுரை வழங்கியுள்ளார் என 29.07.2021–ம் தேதிய இவ்வலுக சுகாதார ஆய்வாளர் குறிப்பு வழங்கியதை தொடர்ந்து பொதுசுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி சருகணி ரோடு MCC மையத்துக்கு புதிய நவீன அரவை இயந்திரம் ஒன்று மற்றும் சலித்தல் இயந்திரம் ஒன்று வாங்கிட உத்தேச செலவீனம் ரூ.14.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணி பொதுசுகாதார பணியாக இருப்பதால் பணியின் அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 92**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்:93

தேவகோட்டை நகராட்சி தொடர்பான வழக்குகளை கீழமை நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் வழக்கு நடத்திட திரு.ஜே.ஆனந்குமார் வழக்கறிஞர், அவர்களை நியமன செய்திட கோரி 27.07.2021ல், அன்னார் அளித்துள்ள மனு மற்றும் ஆணையாளர் அவர்களின் 30.07.2021ம், தேதிய உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அன்னார் 23 ஆண்டுகள் பணி அனுபவம் உள்ளதால் அன்னார் திரு.ஜே.ஆனந்குமார், வழக்கறிஞர் அவர்களை இந்நகராட்சி வழக்குளை நடத்திடவும் வழக்குகள்

குறித்த ஆலோசனை பெற்றிடவும் நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 93</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்:94</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான ரஸ்தா உரக்கிடங்கில் குப்பைகள் அதிகளவில் தேக்கமடைந்து வாகனங்கள் உள்ளே செல்ல இயலாத நிலையில் உள்ளதால் அப்பகுதியை JCB இயந்திரம் மூலம் சுத்தம் செய்து வழி ஏற்படுத்த விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் இரண்டு விலைவிகிதங்கள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளி விகிதங்கள் கீழ்காணுமாறு

1) RD 84 Singampunaring – Thiruppathur Agro Engineering & Service Co-operative Cetre Limited – Singampunari.

**JCB Machine Rs.975.00 / hours.**

1) ஸ்ரீ வெற்றி விநாயகர் எர்த் மூவர்ஸ் – காரைக்குடி.

**JCB இயந்திரம் வாடகை ரூ.1050.00/ hours.**

மேற்குறிப்பிட்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளி விகிதங்களில் குறைவான விலைவிகிதங்கள் வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)குறைவான விலைவிகிதம் வழங்கிய RD 84 Singampunaring – Thiruppathur Agro Engineering & Service Co- operative என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 94</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்:95</u>

தேவகோட்டை நகராட்சி பகுதியில் இருக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் பூர்த்தி செய்யும் வகையில் நகரின் முக்கிய இடங்களில் அமைப்பட்டுள்ள 65 எண்ணம் பவர் பம்ப் ஆழ்துளை கிணறுகளில் நீர் ஆதாரத்தை கொண்டு 27 வார்டு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 LPCD விகிதம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. அவ்வாறு விநியோகம் செய்யப்படும் குடிநீர் பொதுமக்களுக்கு சுகாதாரமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு திரவ குளோரின் (Sodium Hypo Chlorite) கலந்து விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் குடிநீரில் ஒரு லட்சம் லிட்டருக்கு 2.50 லிட்டர் முதல் 3 லிட்டர் வரை திரவ குளோரின் கலந்து விநியோகம் செய்யப்படுகிறது. அவ்வாறு செய்யப்படும் போது கடைசி பகுதியில் (Tail End) 0.50 to 1.00 குளோரின் அளவு கிடைக்கும். இனிவரும் காலங்கள் மழைகாலமாக உள்ளதால் திரவ குளோரின் இருப்பில் வைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே திரவ குளோரின் வாங்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை குடிநீர்நிதியில் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 95</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.